

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை தாலுகா கார் குடியில் சைதாப்பேட்டை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சைதை கா.கிட்டுவின்14வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். உடன் தேவகோட்டை தெற்கு ஒன்றிய கழக செயலாளர் நாகனி ரவி, தேவகோட்டை நகர் கழக செயலாளர் பெரி.பாலா, பொதுக்குழு உறுப்பினர் ஜெ.மதார்சேட் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



மதுரை மாவட்டம் சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட பாலமேடு பேரூராட்சி கிழக்குத் தெருவில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 52 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட சமுதாயக் கூட்டத்தினை வணிகவரி மற்றும் பதிவு துறை அமைச்சர் பி.மூர்த்தி, சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன் முன்னிலையில் திறந்து வைத்தார். உடன் பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் மணிகண்டன், பேரூராட்சி சேர்மன் சுமதி பாண்டியராஜன், துணைச் சேர்மன் ராமராஜ், கழக நிர்வாகிகள் எம்.ஆர்.எம்.பாலசுப்பிரமணியன், மனோகர வேல் பாண்டியன், தன்ராஜ், முத்தையன், பிரபு உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர் மற்றும் திரளான பொதுமக்கள் பங்கேற்றனர்.

### ஆலோசனைகளும் உரிய சிகிச்சைகளும் வழங்கப்படுவது வெகு சிறப்பாகும்!

# ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ முகாம் மருத்துவத் துறையில் மாபெரும் புரட்சி!

### ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஆக.5-

‘நலம் காக்கும் ஸ்டாலின்’ முகாம் மருத்துவத்துறையில் மாபெரும் புரட்சியாகக் கருதப்படுகிறது. உரிய ஆலோசனைகளும், சிகிச்சைகளும் வழங்கப்படுவது வெகு சிறப்பாகும் என ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு தெரிவித்துள்ளது.

அது வருமாறு:-





தமிழக அரசு கல்வியையும், மருத்துவத்தையும் தன் இரு கண்களாக பாவித்து அதற்கேற்ற வகையில் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. மருத்துவத்துறையில், “மக்களைத் தேடி மருத்துவம்” திட்டம் மூலம் விடுகளுக்கே சென்று மருந்து, மாத்திரைகளை வழங்கும் திட்டம் மக்களுக்கு பெரும் பயன் அளித்து வருகிறது. இப்போது அரசு மருத்துவமனைகளில் நாள்தோறும் 7 லட்சம் உள்நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

இதுதவிர 7 லட்சத்துக்கும் மேற்பட்ட புறநோயாளிகளும் சிகிச்சைக்காக வருகிறார்கள். இதெல்லாம் உடல் நலக்குறைவு ஏற்பட்டவுடன் அளிக்கப்படும் சிகிச்சைகளாகும். என்றாலும் மக்கள் முன்கூட்டியே தங்கள் உடல் நிலையை பரிசோதிப்பது இல்லை. அதன் காரணமாகத்தான் பல உடல் நலக்குறைவுகள் ஏற்படுகின்றன.

இதற்காக கடந்த ஏப்ரல் மாதம் 21ந்தேதியன்று தமிழக சட்டசபையில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மக்களுக்கு உயர் மருத்துவ சேவைகள் வழங்க ரூ.12.78 கோடி செலவில் மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவித்தார். இதை செயல்படுத்தும் விதமாக, “நலம் காக்கும் ஸ்டாலின்” என்ற பெயரில் தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் 3 முகாம்கள் விதம் 388 பஞ்சாயத்து யூனியன்களில் 1,161 முகாம்களும், சென்னை மாநகராட்சியில் ஒரு மண்டலத்துக்கு ஒரு முகாம் வீதம் 15 முகாம்களும், 10 லட்சம் மக்கள் தொகைக்கு மேற்பட்ட 5 மாநகராட்சிகளில் தலா 4 முகாம்களும், 10 லட்சம் மக்கள் தொகைக்கு குறைவாக உள்ள 19 மாநகராட்சிகளில் தலா 3 முகாம்கள் என்றும் ஆக மொத்தம் 1,256 முகாம்கள் நடத்தப்பட இருக்கிறது.

முதல்கட்டமாக 38 மாவட்ட தலைநகரங்களிலும், இந்த முகாம் கடந்த வாரம் சனிக்கிழமை நடந்தது. சென்னையில் இந்த முகாமை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். அதில் பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை மருத்துவம், இதய மருத்துவம், நரம்பியல் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை மருத்துவம், மகப்பேறு மருத்துவம், பல் மருத்துவம், கண் மருத்துவம், மனநல மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், நுரையீரல் மருத்துவம், நீரிழிவு நோய் மருத்துவம் போன்றவற்றில் மருத்துவ நிபுணர்கள் மூலம் பரிசோதனைகளை செய்து சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. அதோடு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் பதிவு செய்தல் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான அரசு அங்கீகார சான்றிதழ் இந்த முகாமில் வழங்கப்படுகிறது.

இப்போது நடந்த முகாம்களில் 10 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் அனைத்து சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன. அதன் முடிவுகள் மக்களின் செல்போன்களுக்கு குறுஞ்செய்திகளாக அனுப்பப்பட்டன. தனியார் மருத்துவமனைகளில் பெரும் பொருட்செலவில் செய்யும் பரிசோதனைகள் அனைத்தும் நலம் காக்கும் ஸ்டாலின் முகாம்களில் இலவசமாக நடப்பது நிச்சயமாக மக்களுக்கு நலம் பயக்கும்.

எக்ஸ்ரே, இசிஜி, ஸ்கேன், எக்கோ, கார்டியோகிராம், ரத்த பரிசோதனை என்று அனைத்து பரிசோதனைகளும் ஒரே இடத்தில் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் வாரந்தோறும் சனிக்கிழமைகளில் இந்த முகாம்கள் நடத்தப்பட்டு 6 மாதங்களில் 1,2566 முகாம்களும் நடத்தி முடிக்கப்படும் என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவித்து இருக்கிறார். இது மருத்துவத்துறையில் ஒரு பெரிய புரட்சி என்றால் அது மிகையாகாது. நோய் நொடிகள் வராமல் இருக்க உப்பு, எண்ணெய், சர்க்கரையை சற்று குறை என்பது போன்ற ஆலோசனைகளும் விழிப்புணர்வாக வழங்கப்படுவது வெகு சிறப்பாகும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### நெல்லை திசையன்விளையில்

# ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ சிறப்பு மருத்துவ முகாம்!

### பேரவைத் தலைவர் மு.அப்பாவு துவக்கி வைத்தார்!

நெல்லை, ஆக.5 –

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையில் (02.08.2025) அன்று மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத்துறை சார்பில் ”நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம் திட்டத்தை தமிழ்நாடு முழுவதும் துவக்கி வைத்தார்கள்.

அதனை தொடர்ந்து நெல்லை மாவட்டம் திசையன்விளையில் ”நலம் காக்கும் ஸ்டாலின்சிறப்பு மருத்துவ முகாம் திட்டத்தை சட்டப் பேரவைத்தலைவர் மு.அப்பாவு மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார் தலைமையில்,மாவட்ட ஊராட்சித் தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ் முன்னிலையில் துவக்கி வைத்தார்.

பின்னர் சட்ட பேரவைத்தலைவர் மு.அப்பாவு பேசியதாவது.

முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தரப்பு மக்களும் பயனடையும் வகையில் பல்வேறு எண்ணற்ற திட்டங்களை கொண்டு வந்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். இன்று ”நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம் திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார்கள். இந்த திட்டத்தின் மூலம் பல்லாயிரக்கணக்கான பேர் பயனைடையும் வகையில் தமிழ்நாடு முழுவதும் ஆகஸ்ட் மாதம் முதல் பிப்ரவரி மாதம் வரை ஒவ்வொரு வாரம் சனிக்கிழமைகளில் வட்டாரத்திற்கு 3 முகாம் மற்றும் மாநகராட்சிக்கு 3 முகாம் என தமிழ்நாட்டில் மொத்தம் 1256 நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற உள்ளது.

**சிறப்பு மருத்துவ ஆலோசனை பெறலாம்!**

இம்முகாமில் அடிப்படை சிகிச்சை மற்றும் உயர்நிலை மருத்துவப் பரிசோதனைகளுடன் முழுமையான உடல் பரிசோதனைகளும் (உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், மின் இதய வரைபடம், எக்கோ, அல்ட்ராசவுண்ட் ஸ்கேன், எக்ஸ்ரே மற்றும் முழுமையான இரத்தப் பரிசோதனை,காசநோய் மற்றும் தொழுநோய் கண்டறிதல் பரிசோதனைகளும்,ஆரம்ப கட்ட புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகள் போன்ற அனைத்து பரிசோதனைகளும் கண்டறியப்படும்) மேலும் பொது மருத்துவம், அறுவை சிகிச்சை, இதயவியல், மகப்பேறு மருத்துவம் எலும்பு மற்றும் நரம்பியல், மனநலம், நுரையீரல், தோல் நோய், காது மூக்கு தொண்டை மருத்துவம்,கண் மருத்துவம், பல் மருத்துவம், ஆயுஷ் மற்றும் இயன்முறை சிகிச்சை ஆகிய சிறப்பு மருத்துவ நிபுணர்களின் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

**அனைத்துத் தரப்பினரும் பயனடையலாம்!**

மேற்கண்ட பரிசோதனைகள் மட்டுமின்றி முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீடுத்திட்டத்தின் கீழ் பதிவு செய்தல்,மாற்றுத்திறனாளி களுக்கான அரசு அங்கீகார சான்றிதழ் வழங்குதல், அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு தொழிலாளர் நல வாரியத்தின் உறுப்பினர் அடையாள அட்டை வழங்குதல் போன்ற சேவைகள் இம்முகாமில் வழங்கப்படுகிறது. மேலும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஊட்டச்சத்து விழிப்புணர்வு பிரச்சாரமும் சரியாக உண்ணுங்கள் இயக்கம் மூலம் அறிவுரைகள் வழங்கப்படும். மேலும் 30 வயதிற்கு மேற்பட்டோர், நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள்,மன நல பாதிப்புடையோர், இதய நோயாளிகள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள்,வளர்ச்சிக் குன்றிய குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள், பழங்குடியினர் மற்றும் அனைத்துத் தரப்பு மக்களும் இம்முகாமில் பயனடையலாம்.

**இந்தியாவிலேயே முதல் மாநிலம் தமிழ்நாடு!**

மேலும் இந்த முகாமில் 17 சிறப்பு மருத்துவர்கள் கலந்து கொண்டு பல்வேறு பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகள் வழங்குகிறார்கள். இந்தியாவிலையே தமிழ்நாடு மருத்துவ துறைகளில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. பல்வேறு மாநிலங்களில் இருந்து மக்கள் தமிழ்நாட்டிற்கு தான் உயர் சிகிச்சைக்காக வருகிறார்கள். உடல் உறுப்பு தானத்தில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக திகழ்கிறது. ஒன்றிய அரசே பாரட்டியுள்ளது. ஏழை, எளிய மற்றும் நடுத்தர மக்கள் மருத்துவமனைகளுக்கு சென்று சிகிச்சை பெறுவதற்கு அதிக பணம் தேவைபடும் என மருத்துவமனைகளுக்கு செல்லாமல் தவிர்த்து வருகிறார்கள். இந்த ”நலம் காக்கும் ஸ்டாலின்சிறப்பு மருத்துவ முகாம் திட்டத்தின் மூலம் ஏழை,எளிய மக்களுக்கும் தரமான சிகிச்சைகள் வழங்கப்படுகிறது.மேலும் உயர் சிகிச்சை பெறுவதற்கும் வழிவகைகள் ஏற்படுத்தி கொடுக்கப்படுகிறது.இந்த திட்டத்தின் மூலம் அனைத்து தரப்பு மக்களும் பயன்பெற்று தங்களின் உடல் ஆரோக்கியத்தை பாதுகாத்து கொண்டு நலமுடன் வாழ கேட்டுக்கொள்கிறேன். தொடர்ந்து ஒவ்வோரு சனிக்கிழமையும் திருநெல்வேலி மாவட்டத்தில் 30 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடைபெற உள்ளது. பொது மக்கள் அனைவரும் இம்முகாமில் கலந்து கொண்டு அனைத்து சிறப்பு மருத்துவ பரிசோதனைகள் மற்றும் அறிவுரைகள் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.


இவ்வாறு பேரவை தலைவர் மு.அப்பாவு பேசினார்.

நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் சுகன்யா,அரசு மருத்துக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் ரேவதி பாலன்,மாவட்ட திட்ட அலுவலர் சரவணன்,மாவட்ட சுகாதார அலுவலர் மருத்துவர் வேல்முருகன் கணேஷ், வட்டார மருத்துவர் ஆட்லின் செரிபா, மருத்துவப் பணிகள் இணை இயக்குநர் மருத்துவர் லதா , பேரூராட்சி கவுன்சிலர்கள் கண்ணன் கமலா சுயம்பு ராஜன், வட்டார சுகாதார மேற்பார்வையாளர் ராமசாமி உட்பட அரசு அலுவலர்கள் ஊர் பொது மக்கள் மருத்துவர்கள், செவிலியர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ.த.தங்கமுத்து

### ஆகஸ்ட் 5 (1998)



**தனது இளமைப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**திருச்சி மாவட்டம், மணிகண்டம் ஒன்றியக் கழகச் செயலாளராக மூன்று முறை பொறுப்பு வகித்து ஒன்றியத்தில் கழகம் வளர பாடுபட்டவர்.**

**உய்யக்கொண்டான் திருமலை தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத் தலைவராக பொறுப்பு வகித்தவர்.**

**இந்திமொழி எதிர்ப்பு போராட்டம் – இலங்கைத் தமிழர் ஆதரவு போராட்டம் என கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்றதோடு, நெருக்கடி நிலையின் போது, மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க.

### இளைஞர் அணி அமைப்பாளர் விஸ்வநாத் தந்தை

# சேந்தமங்கலம் ஆர்.சிங்காரம் மறைவு!

### கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி, – அமைச்சர் மா.மதிவேந்தன், எம்.எல்.ஏக்கள், கழக நிர்வாகிகள் அஞ்சலி

நாமக்கல், ஆக. 5 -

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி அமைப்பாளர் விஸ்வநாத் தந்தையும், சேந்தமங்கலம் பேரூர் கழக அவைத் தலைவருமான ஆர்.சிங்காரம் நேற்று முன்தினம் (03.08.2025 - ஞாயிற்றுக் கிழமை) மாலை இயற்கை எய்தினார்.

மறைந்த சிங்காரம் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் பணியாற்றி உள்ளார். திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஈடுபாட்டுடன் இருந்த அவர் தனது அரசு பணி ஓய்வுக்கு பிறகு சேந்தமங்கலம் பேரூர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அவைத் தலைவராக பொறுப்பேற்று கடந்த 15 ஆண்டுகளாக பணியாற்றி வந்துள்ளார். இவருக்கு விஜயா என்ற மனைவியும், அருண், விஸ்வநாத் என்ற இரு மகன்களும் உள்ளனர்.

இதில் இளைய மகன் விஸ்வநாத், நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி அமைப்பாளராக இருந்து வருகிறார்.



மறைந்த அன்னார் சிங்காரம் அவர்களுக்கு நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், முன்னாள் மாவட்டச் செயலாளர் செ.காந்தி செல்வன், சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம் கே.பொன்னுசாமி, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் கள் ஜோயல், சீனிவாசன், ஆனந்த குமார் மற்றும் மாநில, மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகி கள், கழக நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் உள்ளிட்டோர் மலர் அஞ்சலி செலுத்தினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பொன். கோவிந்தராஜன்

### ஆகஸ்ட் 5 (2020)



**இளமைக் காலம் முதலே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**நீடாமங்கலம் பேரூர்ச் செயலாளர், ஒன்றிய அவைத்தலைவர் என பொறுப்புகள் வகித்து அப்பகுதியில் கழக வளர பாடுபட்டவர்.**

**நீடாமங்கலம் பேரூராட்சித் தலைவர், நீடாமங்கலம் கூட்டுறவு வங்கித் தலைவர் ஆகிய பதவி வகித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**